பஸ்பாகே கோறளை பிரதேச சபையினால் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் 20 ஆம் திகதி நடைபெற்ற சபை கூட்டத்தின் தீர்விலக்கம் 05:35 இன் கீழ் சபையினால் பிரேரிக்கப்பட்ட யோசனைக்கமைய பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில்

பௌதீக திட்டமிடல், பாதைகள், கட்டிடங்கள், மயான பூமிகள், கிணறுகள் மற்றும் பீலிகள், வீதி விளக்கு கொள்கைகளை பொதுமக்கள் அறிந்துக்கொள்வதற்காக இங்கு பகிரங்கமாக வெளியிடுப்படுகின்றது.

ஓ. ஜீ. ரோஹன பண்டார,
தலைவர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்பாகே கோரளை,
2022, நவெம்பர் 13.

நோக்கம் :

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதன் மூலம் பௌதீக திட்டமிடலுக்காக தரம் வாய்ந்த முடிவொன்றை உருவாக்குதல்.

எடுகோள்கள் :

* சனச்செறிவு
* பின்தங்கிய நிலைமை
* மக்கள் கோரிக்கை
* மக்கள் பங்களிப்பு
* செயற்பாடு தேவைப்படுவோர்களின் முக்கியத்துவம்

நடைமுறை

01. பாதை

(i) வருடத்திற்கு ஒரு முறையாவது சகல பாதைகளிலுமுள்ள வடிகான்களை வெட்டுதல், வடிகான்களிலுள்ள குப்பைகளை அள்ளுதல்
(ii) பழுதடைந்த பாதைகளின் 40% பழுதுகளை இல்லாதொழிப்பதற்கு தேவையான நிதியை வரவு செலவு திட்டத்தில் வழங்குதல்
(iii) பாதைகளிலுள்ள பாலங்கள், மதகுகள், கைப்பிடிகளுக்கு வருடத்திற்கு ஒரு முறை நிறம் பூசுதல்
(iv) மக்கள் பங்களிப்புடன் புதிய பாதைகள் வெட்டுதல், பாதைகளை விஸ்தரித்தல் போன்றவைகளை வர்த்தமானி பத்திரிக்கையில் வெளியிடல்
(v) சகல பாதைகளும் உள்ளடங்கும் வகையில் கட்டிட எல்லைகளையும் வீதி எல்லைகளையும் வர்த்தமானியில் அறிக்கையிடல், எல்லைகளை அளவிடல்
(vi) பாதைகளுக்கு ஆபத்துக்கள் விளைவிக்கும் நபர்களுக்கு தண்டனைகள் வழங்கப்படுதல் தொடர்பாக மக்களுக்கு அறிவித்தலும் அவற்றை நடை முறைப்படுத்தலும்
(vii) பாதை எல்லைகளில் அமைந்துள்ள கட்டிடங்களின் சுத்தம் தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் அடிப்படையில் செயற்படுதல்
(viii) பாதைகளுக்கு புதிதாக கொங்றீட் இடல்/தார் இடல்/வடிகான் அமைத்தல்
(ix) நகர பகுதிகளில் பாதை மேடைகளை அமைத்தல்
(x) சபைக்குரிய பாதைகளில் அறிந்துக்கொள்வதற்கான பெயர் பலகைகளை பொருத்துதல்
(xi) ஒற்றையடி பாதைகளை வாகனங்கள் பயணிக்கக்கூடிய பாதைகளாக்குதல் மற்றும் அந்த நிலைக்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடல்
(xii) வீதிகளை வெளிச்சப்படுத்தல்

02. மயான பூமி

(i) சகல மயான பூமியினதும் உரிமையை பிரதேச சபை பெற்றுக்கொள்ளல்
(ii) எல்லைகளை துப்புரவு செய்து வேலி அமைத்தல்
(iii) மக்கள் பங்களிப்புடன் கூடிய மயான பூமியில் பூதவுடல்களை புதைக்கும் பிரதேசத்தை அடையாளப்படுத்தல்
(iv) பரப்பளவு மற்றும் மக்கள் விருப்பதுடன் மயான பூமிகளில் எடு பகுதியில் வனிக நட வடிக்கைகறுக்காக முலிதை அனை பயிகிடுதல்
(v) மரணாதார சங்கங்களின் பங்களிப்பில் மயான பூமிகளில் புதைக்கும் பூதவுடல்கள் தொடர்பான தகவல்களை திகதி அடிப்படையில் பெற்றுக்கொண்டு தனிப்பட்டவர்களின் சுய விபரங்கள் அடங்கிய புத்தகமொன்றை நடாத்திச் செல்லல்

(vi) ஞாபகக் கல்லறைகளை நிர்மாணிக்கும் நபர்களுக்கு பிரதேச சபையில் அனுமதித்து வழங்கப்பட்ட இலக்கத்தை கல்லறையில் பொறித்தல்

(vii) மயான பூமியை பயன்படுத்துபவர்களின் பங்களிப்பில் வேலிக்காக மரங்கள் நாட்டுவதற்கு திட்டமிடல்

(viii) மயான பூமிகள் பராமரிக்கும் செயற்பாடுகளை மரணாதார மற்றும் நலன்புரி சங்கங்களுக்கு வழங்குதல்

03. கிணறுகளும் பீலிகளும்

(i) புதிதாக அமைக்கப்படும் கிணறுகள் மற்றும் பீலிகளின் உரிமைகளை பொறுப்பேற்றல்

(ii) கிணறுகள், பீலிகளை அமைக்கும் போது அதற்காக மக்கள் பங்களிப்பை பெற்றுக்கொள்ளல்

(iii) அமைக்கப்பட்டுள்ள கிணறுகள், பீலிகளுக்காக வருடாந்த பராமரிப்பு வேலைத்திட்டங்களை தயாரித்தல்

(iv அழிந்து போகக்கூடிய நிலையிலுள்ள கிணறுகளை தெரிந்தெடுத்து அவற்றை பொதுமக்களின் தேவைக்கேற்ப புனர்நிர்மாணம் செய்தல்

(v) தொற்றுநோய் பரவும் காலங்களில் நீரின் தன்மையை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளல்

(vi) பாதுகாப்பற்ற ஆழமான கிணறுகளை பாதுகாப்பான நிலைக்கு கொண்டு வரல்

(vii) கிணறுகள், பீலிகளுக்கு செல்லும் பாதைகளை நிர்மாணித்தலும் பராமரித்தலும்

(viii) புதிய நீர்ப்பாசனத்திட்டங்களின் உருவாக்கத்தை காரணமாகக் கொண்டு பயன்பாட்டுக்கு உட்படுத்தாத கிணறுகளை மூடுதல்

04. வீதி விளக்குகள் கொள்கை

(i) மின்நிலைமாற்றியின் கொள்ளளவின் 3% ஐ பொது மக்களின் தேவை, நகர அலங்காரங்களை மேம்படுத்தும் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்தல்

(ii) அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களின் பிரதான வீதிகள், உள்வீதிகள், சந்திகள் போன்றவற்றில் வீதி விளக்குகள் பொருத்துதல்

(iii) ஏனைய அருகிலுள்ள பிரதேசங்களில் பொது மக்களின் கோரிக்கைக்கேற்ப வீதி விளக்குகள் பொருத்துதல்

(iv) பிரதேச சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களின் சந்திகளிலும் வழிபாட்டுத் தலங்கள், அரசாங்க கட்டிடங்கள் அமைந்துள்ள இடங்களிலும் வீதி விளக்குகள் பொருத்தல்

(v) வீதி விளக்குகள் ஆளியை இயக்குவதற்கும் நிறுத்துவதற்கும் பொதுமக்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்களுக்கு முக்கியத்துவமளித்தல்

(vi) பொது மக்களின் வேண்டுகோளிற்கிணங்க பொருத்தப்பட்ட வீதி விளக்குகளின் நீண்ட கால பாதுகாப்பு தொடர்பாக சிக்கல்கள் ஏற்படாவிட்டாலும், ஏனைய வீதி விளக்குகளின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவும் பராமரிப்பதற்காகவும் அதிகாரி ஒருவரை நியமித்தல்

(vii) வீதி விளக்குகள் கணக்கேட்டை பேணலும் சிறப்பாக நடாத்திச் செல்லலும்

(viii) செயலிழக்கப்பட்ட வீதி விளக்குகளை பராமரித்தல்

(ix) விருத்தியடைந்த பிரதேசங்களாக பெயரிடப்படாத பிரதேசங்களில் வீதி விளக்குகளை பொருத்தி பின் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக வர்த்தமானியில் அறிக்கையிடல்

(x) நிலங்களை பகுதிகளாக்கும் போது அந்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தினூடாக தேவையான வீதி விளக்குகளை பெற்றுக்கொள்வதற்கு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல்

(xi) நிலங்களை பகுதிகளாக்கும் போது அந்த நிலப்பகுதிகளின் அளவிற்கேற்ப அதற்கு தேவையான கொள்ளளவுடைய மின்நிலைமாற்றியை பொருத்துவதற்கு உபதேசம் வழங்குதல், அந்த மின் நிலைமாற்றியின் கொள்ளளவினூடாக உச்சளவிலான வீதி விளக்குகளை பொருத்துதல்

(xii) வீதி விளக்குகளுக்கு ஆபத்து விளைவிப்பவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

(xiii) வீதி விளக்குகள் பொருத்துவதற்கு இணையாக பிரதேச சபை அலகு வலுவடைதல்

12-499/13

பஸ்பாகே கோரளை பிரதேச சபை

பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் அபிவிருத்தி ஆலோசனை சபையை தாபிப்பதற்கான துணைவிதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 (1) ஆம் பிரிவின் கீழ் 2013. 09. 30 ஆந் திகதி மாதாந்த சபைக்கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தி ஆலோசனை சபையை ஸ்தாபிப்பதற்கான துணைவிதிகள் 2022 ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி நடைபெற்ற சபை கூட்டத்தின் 05:36 இன் கீழ் சபை பிரேரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பஸ்பாகே கோறளை பிரதேச சபை அபிவிருத்தி ஆலோசனை சபையை ஸ்தாபிப்பதற்கான துணைவிதி அறிவித்தலை இங்கு பிரசுரிக்கின்றேன். அந்த

அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து அந்த துணைவிதி பஸ்பாகே கோரளை பிரதேச சபை நிர்வாக பிரதேசத்துக்கு அமுல்படுத்தப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

ஓ. ஜீ. ரோஹன பண்டார,
தலைவர்,
பஸ்பாகே கோரளை பிரதேச சபை,
ரம்புக்பிட்டி.

பிரதேச சபை அலுவலகம்,
பஸ்பாகே கோரளை,
2022, நவெம்பர் 13.

அட்டவணை

1. பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன்புரி சேவைகளை முறையாக மேற்கொள்வதற்கு பிரதேச சபைக்கு துணைபுரியும் அபிவிருத்தி ஆலோசனை சபையின் துணைவிதிகளாக இந்த துணைவிதிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.
2. மாதாந்த பொது சபைக்கூட்ட தீர்மானத்தின் படி நியமிக்கப்படுகின்ற இந்த ஆலோசனை செயற்குழுவின் அங்கத்தவர்கள் பிரதேச சபை நிர்வாக பிரதேசத்துக்குள் வசிப்பவர்களாக இருப்பதுடன், பொதுமக்களின் உரிமைகளுக்கு பங்கம் விளைவிக்காதவர் களாகவும் இருத்தல் வேண்டும்.
3. இந்த துணைவிதிகள் மூலம் நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்களின் பதவிக்காலம் 01 வருடம் வரை இடம்பெறும்.
4. அபிவிருத்தி ஆலோசணை செயற்குழுவின் அங்கத்தவர்களை நியமிக்கும் போது அவர்களுக்கு ஏதாவது ஒரு செயற்பாட்டில் விசேட திறமையிருப்பின் மிகவும் பொருத்தமானதாகவிருக்கும்.
5. அதிவிசேட திறமைகள் உள்ளவர்களை தேடிகொள்வது சிரமமாயின் பல்வேறு செயற்பாடுகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை இதற்காக நியமித்துக்கொள்ளலாம்.
6. அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் சமூக சேவைகளில் ஈடுபடுபவர்களை அதற்காக நியமித்துக் கொள்ளலாம்.
7. இந்த அங்கத்துவம் சுயமாக இடம்பெறும் கௌரவமான ஆலோசனை சேவையாகும்.

அபிவிருத்தி ஆலோசனை செயற்குழுவின் கடமைகள் :

- நான்காண்டு அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல்
- வருடாந்த வரவு செலவுத்திட்டத்தை தயாரித்தல்
- நிறைவேற்றப்பட வேண்டிய அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னுரிமைப்படுத்தல்
- அவசர இடர்பாடுகளுக்கு உதவிபுரிதல் மற்றும் இடர்பாடுகளை தடை செய்தல்
- வருமான வழிகள் மற்றும் விசேட செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தல்

8. ஒரு வருடத்தில் நடைமுறையிலுள்ள அபிவிருத்தி ஆலோசனை செயற்குழுவின் பதவிக்காலம் 01 வருடமாகும்.
9. எந்த ஒரு உறுப்பினரும் ஆலோசனை செயற்குழுவில் இருந்து விளகினால் ஒரு மாதத்திற்கு முன் கௌரவ சபை தலைவருக்கு அறிவிக்க வேண்டும்.
10. செயற்குழு கூட்டங்களில் அங்கத்தவர்களின் பங்களிப்பு தொடர்பாக குழுத்தலைவர் திருப்தியடைதல் வேண்டும்.

வரைவிலக்கணம் :-

ஆலோசனை செயற்குழு
அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்கும் அதிகாரங்களை விஸ்தரிப்பதற்காக பிரதேசத்தின் அதிவிசேட திறமைகள் கொண்டவர்கள் அடங்கிய குழு

பதவிக்காலம்
குழு அங்கத்தவர்கள் கடமைகளை மேற்கொள்ளும் காலத்தை குறிக்கும்.

அதிவிசேட திறமைகள்
சமூக செயற்பாடுகளை சிறந்த முறையில் மேற்கொள்ளக்கூடிய திறன்களுடையவர்களை குறிக்கும்.
நிபுணத்துவம்
ஏதாவதொரு செயற்பாட்டினை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் திறமை

சிவில் உரிமைகளுக்கான உள்ளடக்கங்கள்
வாழும் போது சமூகத்துடன் நல்லுறவை பேணி எவ்வித சமூக விரோத செயல்களையும் மேற்கொள்ளாதவர்கள் தொடர்பாக இங்கு குறிப்பிடப்படுகின்றது.

நாகொடை பிரதேச சபை

அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடல் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 147 ஆவது பிரிவின் கீழ் நாகொடை பிரதேச சபைககு அளிக்கப்பட்டுளள அதிகாரங்களின் பிரகாரம் 2022, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற நாகொட பிரதேச சபைக் கூட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை இல. 07(i) முடிவு செய்யப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்
நாகொடை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நாகொடை,
2022, நவம்பர் 21.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 147 ஆவது பிரிவின் கீழ் நாகொடை பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அச்சட்டத்தின் அல்லது அச்சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட உப யாப்பில் விபரிக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணை I இன் நிரலிற்கு உரிய கருமங்களுக்காக நாகொடை பிரதேச சபைக்கு உட்பட்ட யாதாயினும் பகுதி ஒன்றை பயன்படுத்துவதற்காக அதிகாரம் வழங்கி 2023 ஆம் வருடத்தில் விநியோகிக்கப்படும் யாதாயினும் அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக அட்டவணையின் II ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டணங்களை விதித்து அறவிட வேண்டுமெனவும் தீர்மானிக்கின்றேன்.

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் நடவடிக்கைகளுக்காக இலங்கைச் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாயின், அல்லது அச்சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ள அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஹோட்டலொன்று, சிற்றுண்டிச்சாலை அல்லது விடுதியொன்று மேலே குறிப்பிட்ட அட்டவணையில் II ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு ஹோட்டல், விடுதி, சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லும் இடங்களுக்காக அந்த ஹோட்டலின், சிற்றுண்டிச்சாலையின், விடுதியின் 2022 ஆம் வருடத்தில் பெற்றுக் கொண்ட வருமானத்தில் 1% அனுமதிப்பத்திரக் கட்டணமாக வேண்டுமெனவும் பிரதேச சபைக்கு பிரேரிக்கின்றேன்.

அட்டவணை

நிரல் I		நிரல் II		
தொ. இல.	அதிகாரம் வழங்கப்படும் கருமம்	தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை ரூபா ச.	1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா ச.
01.	உணவகம் அல்லது ஹோட்டல் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
02.	தேநீர் அல்லது கோப்பிக் கடை ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
03.	சோற்றுக் கடை (சாப்பாட்டுக்கு அல்லது பார்ஸல்) நடாத்துதல்	500.00	750.00	1000.00
04.	சிற்றுண்டிச்சாலை ஒன்றினை நடாத்துதல் (சுற்றுலாசபையில் பதிவு செய்யப்படாத)	500.00	750.00	1000.00
05.	விடுதியொன்றை நடாத்துதல் (சுற்றுலாசபையில் பதிவு செய்யப்படாத)	500.00	750.00	1000.00
06.	பேக்கரி ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00

அட்டவணை *(தொடர்ச்சி)*

நிரல் I		*நிரல் II*		
தொ. இல.	*அதிகாரம் வழங்கப்படும் கருமம்*	*தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* ரூபா ச.	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* ரூபா ச.
07.	*இறைச்சி விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
08.	*மீன் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
09.	*குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்ட இறைச்சி அல்லது மீன் களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
10.	*தயாரிக்கப்பட்ட உணவுகளை தயாரித்து விநியோகிக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல் (கேட்டரிங் சேர்விஸ்)*	*500.00*	*750.00*	*1000.00*
11.	*பழுதுபடக்கூடிய உணவுப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்களையும் தொகையாகவும், சில்லறையாகவும் விற்பனை செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
12.	*முடி வெட்டுதல், மஸாஜ் செய்தலுக்காக பாபர் ஸாப்பு ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
13.	*இனிப்புப் பண்டங்களை தயாரித்தல், கேக் வகைகளை தயாரித்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
விரும்பத்தகாத வர்த்தகம்				
01.	*மிருகங்களை அறுக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
02.	*1000க்கு குறைவான கோழிகளைக் கொண்ட கோழிப் பண்ணை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
03.	*1000க்கு கூடுதலான கோழிகளைக் கொண்ட கோழிப் பண்ணை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
04.	*25க்கு குறைவான பன்றிகளைக் கொண்ட பன்றிப் பண்ணை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
05.	*25க்கு கூடுதலான பன்றிகளைக் கொண்ட பன்றிப் பண்ணை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
06.	*25க்கு குறைவான பசுக்களைக் கொண்ட பசுத் தொழுவம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
07.	*25க்கு கூடுதலான பசுக்களைக் கொண்ட பசுத் தொழுவம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
08.	*கூல்ஸ்பொட் அல்லது பால் ஆலை அல்லது ஸ்நெக் பார் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
09.	*பப்படம் அல்லது நூட்ல்ஸ் உற்பத்தி அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
10.	*ஐஸ்கிறீம், யோகட், பானப் பைக்கற்றுகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
11.	*ஜேம், ஸிரப், ஸோஸ் வகைகள் உற்பத்தி அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
12.	*கருவாடு, ஜாடி, உலர்த்துதல் அல்லது விற்பனை செய்யும் களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
13.	*கறுவா அரைத்தல், கறுவா எண்ணெய்க் குடிசை ஒன்றை நடாத்துதல் அல்லது கறுவா விறகு விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல் நிலையம்*	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*நிரல் I* அதிகாரம் வழங்கப்படும் கருமம்	*நிரல் II* தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* ரூபா ச.	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* ரூபா ச.
14.	ஒளடத நிலையம், கீரைக் கஞ்சி அல்லது வறுத்த கடலை, நிலக்கடலை (டேஸ்ட் கடலை) விற்பனை	*500.00*	*750.00*	*1000.00*
15.	சுத்தமாக்கப்பட்ட குடிநீர் போத்தலில் அடைக்கப்பட்டு களஞ்சியப் படுத்தல், விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
16.	தேங்காய் எண்ணெய் ஆலை ஒன்றை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
17.	மெடி லெப் ஒன்றினை (இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசீலனை) செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
18.	மிருக வைத்திய ஆஸ்பத்திரி அல்லது சிகிச்சை நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
19.	முச்சக்கர வண்டி, மோட்டார் வாகனம் ஸேர்விஸ் பண்ணும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
20.	மரணச் சடங்கு சேவை நிலையம் (மலர்ச்சாலை) ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
	அபாயகரமான வர்த்தகம்			
01.	கொன்கிரீட் ஸிலிண்டர் அல்லது ஏனைய சீமெந்துப் பொருட்கள் உற்பத்தி அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
02.	சீமெந்து, ப்ளொக் கல், பூச்சாடி, பீரலு உற்பத்தி பொருட்களின் உற்பத்தி அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
03.	பசளை வகைகள், விவசாய இரசாயனப் பொருட்களின் உற்பத்தி, விலங்கு உணவுப் பொருட்களின் உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
04.	அச்சு இயந்திரம் கொண்ட நிலையத்தை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
05.	வெல்டின் வேலைத்தளம் அல்லது டிரில் வேலைத்தளம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
06.	பலகை ஆலை அல்லது பலகைகளை களஞ்சியப்படுத்தி வைக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
07.	இயந்திரங்களினால் கருங்கல் அரைத்தல், கல் உடைத்தல், கல் ஆலை ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
08.	இயங்திர மரவேலை (தச்சு வேலை) குடிசை ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
09.	மண் குவிக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
10.	நெல் தூவும் ஆலை ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
11.	ஸ்கிரீன் பிரின்டின் வேலைத்தளம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
12.	பற்றரி சார்ஜ் பண்ணல் மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
13.	பய்பர் கிளாஸ் வேலைத்தளம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
14.	இரும்பு ஆலை ஒன்றினை நடாத்துதல் (இயந்திரம் உள்ள/இல்லாத)	*500.00*	*750.00*	*1000.00*
15.	அச்சகம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*

நாகொடை பிரதேச சபை

கைத்தொழில் வரி விதித்தல் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் நாகொடை பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2022, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற நாகொடை பிரதேச சபை, மகா சபைக் கூட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை இல 07. (ii) முடிவு செய்யப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
நாகொடை,
காலி,
2022, நவெம்பர் 17.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆவது பிரிவின் (1) வது உப பிரிவில் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாகொடை பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் மேற்கொள்ளப்படுகின்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் I வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழிலுக்காகவும், அவ்வட்டவணையின் II வது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கைத்தொழிலையும் நடாத்திச் செல்வதற்கான இடமொன்றின் வருடாந்தப் பெறுமதிக்கு அந்நிரலிற்கு எதிரே காட்டப்பட்டுள்ள பெறுமதி கொண்ட கைத்தொழில் வரியை 2023 ஆம் ஆண்டுக்கு விதித்து அறவிட வேண்டுமெனவும், அக்கைத்தொழிலை மேற்கொள்ளும் ஒவ்வொருவரும் அவ்வரியை 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் நாகொடை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமெனவும் கௌரவ சபைக்கு பிரேரிக்கின்றேன்.

அட்டவணை

நிரல் I		நிரல் II		
தொ. இல.	வர்த்தகத்தின் தன்மை	தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை ரூபா ச.	1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா ச.
01.	தேங்காய் சேகரித்தல் அல்லது தொகையாக அல்லது சில்லறையாக விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
02.	அரிசி தொகையாக அல்லது சில்லறையாக விற்பனை செய்யும் நிலையமொன்று நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
03.	பலகைகள் விற்பனை செய்யும் வியாபார நிலையமொன்று நடாத்திச் செல்லுதல	500.00	750.00	1000.00
04.	தென்னம் பராளை மற்றும் யட்டலீ விற்பனை நிலையமொன்று நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
05.	விறகுக் குடிசை ஒன்று நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
06.	வீட்டுத் தளபாடங்கள் விற்பனை நிலையமொன்று நடாத்திச் செல்லுதல்	500.00	750.00	1000.00
07.	சாதாரண மரவேலை (தச்சு வேலை) குடிசை ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*நிரல் I* *வர்த்தகத்தின் தன்மை*	*நிரல் II* *தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் *ரூபா ச.*	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* *ரூபா ச.*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* *ரூபா ச.*
08.	*மட்பாண்டங்கள் உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
09.	*சாப்பு பொருட்கள், மணிப் பொருட்கள், வாசனைப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
10.	*முச்சக்கர வண்டிகள் மோட்டார் சைக்கிள்கள் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
11.	*பாதணிகள் விற்பனை நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
12.	*ஆடைகளை சுத்தப்படுத்தும் நிலையம் (லொண்டரி) ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
13.	*சில்லறைக் கடை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
14.	*காய்கறிகள் அல்லது பழங்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
15.	*துவிச்சக்கர வண்டிகள் பழுது பார்க்கும் (வின்கல்) நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
16.	*மோட்டார் வண்டிகள் பழுது பார்க்கும் (கராஜ்) நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
17.	*துவிச்சக்கர வண்டி மின் பொருட்கள், குளிர்சாதனப் பெட்டிகள் அல்லது தையல் இயந்திரங்கள் மற்றும் மேலதிகப் பாகங்களின் விற்பனை*	*500.00*	*750.00*	*1000.00*
18.	*அலங்காரப் பொருட்கள் அல்லது கெட்டயம் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
19.	*அலங்காரப் பொருட்கள் அல்லது செதுக்கல் பொருட்கள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
20.	*தோலினாலான பொருட்கள் உற்பத்தி அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்.*	*500.00*	*750.00*	*1000.00*
21.	*வெற்றிலை, பாக்கு, தும்புத்தடி, விளக்குமாறு, வாழைக்காய், கீரை வகைகள், மட்பாண்டங்கள், இளநீர் விற்பனை (சாதாரண) வர்த்தகம்*	*500.00*	*750.00*	*1000.00*
22.	*சுதேச வைத்தியம் ஒன்றினை நடாத்துதல் அல்லது சுதேச வைத்திய மருந்துகளை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
23.	*பற்சிகிச்சை அல்லது பல் கட்டும் நிலையம் ஒன்று, எக்ஸ்ரே இயந்திரம் ஒன்றினைக் கொண்டு நடாத்துதல்*			
24.	*விற்பனைக்காக காளான் அல்லது வேறு பூஞ்செடிகளை பாத்தியிடல் அல்லது காட்சிப்படுத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
25.	*பிளாஸ்ரிக் பொருட்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
26.	*சோதிட வேலைகள் செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
27.	*மணப் பெண்களை அலங்கரிக்கும் (பியூட்டி சலூன் ஒன்று) நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
28.	*புடவை விற்பனை செய்யும் (புடவைக்) கடை ஒன்று) நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
29.	*ஆடைகள் தைக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*நிரல் I* *வர்த்தகத்தின் தன்மை*	*நிரல் II* *தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச.	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை* ரூபா ச.	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்* ரூபா ச.
30.	மூக்குக் கண்ணாடி உற்பத்தி, விறபனை செயயும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
31.	புகைப்படங்கள் பிடிக்கும் நிலையம் (ஸ்ட்டுடியோ ஒன்று) நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
32.	படங்களை பிரேம் பண்ணும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
33.	சீடீ, வீசீடீ, வடியோ கெஸட் பாடல்களை பதிவு செய்யும் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
34.	காகிதாதிகள், செய்திதாள்கள், சஞ்சிகைகள், பாடசாலை உபகரணங்கள் (புக் ஷொப்) கொண்டு நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
35.	உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை வழங்கும் நிலையம் (கொமினிகேஷன்) ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
36.	உடனடி போட்டோ பிரதிகள் பண்ணல், ரோனியோ பண்ணல், லெமினேட்டிங் பண்ணல், தட்டச்சு செய்து கொடுக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
37.	கணினி இயந்திரங்கள் விற்பனை செய்தல், பழுது பார்த்தல் பயிற்சிப் பாசறைகளை நடாத்தும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
38.	வெளிநாட்டு காசோலைகள் (நிதி) மாற்றும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
39.	குஷன் வேலைத்தளம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
40.	அட்டபிரிகர பூசைப் பொருட்களை களஞ்சியப்படுத்தி விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
41.	சங்கீதப் பொருட்களை வாடகைக்கு வழங்கும் மற்றும் உற்பத்தி செய்யும் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
42.	அளவை நிறை உபகரணங்களை பழுது பார்க்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
43.	நுளம்பு நெட் தைக்கும் நிலையம் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
44.	செய்தித் தாள் அறிவித்தல்களை வெளியிடும் முகவர் நிலையம் ஒன்றினை அல்லது செய்தித்தாள் விற்பனை செய்யும் முகவர் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
45.	படகு சேவைகளை நடாத்துதல் (நிலையம்)	*500.00*	*750.00*	*1000.00*
46.	ஜூகி மெஷின் பயிற்சிகளை வழங்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
47.	கையடக்கத் தொலைபேசி மற்றும் தொலைபேசிகளின் மேலதிகப் பாகங்கை விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*
48.	பழைய இரும்புப் பொருட்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், வெற்று போத்தல்கள், பத்திரிகைகள், கோணிகள் களஞ்சியப்படுத்தி வைக்கும் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

நிரல் I		*நிரல் II*		
தொ. இல.	*வர்த்தகத்தின் தன்மை*	*தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)*		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்*
		ரூபா ச.	*ரூபா ச.*	*ரூபா ச.*
49.	மீங்கான் பொருட்கள் (போஸிலேன், சில்வர் பொருட்கள் உட்பட) களஞ்சியப்படுத்தி வைக்கும் மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
50.	செல்லப் பிராணியாக மீன்களை வளர்த்தல், விற்பனை மற்றும் மீன் தாங்கிகளை தயார் செய்தல் மற்றும் விற்பனை	500.00	750.00	1000.00
51.	ரேஸ் (பந்தயங்கள்) பிடித்தல் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
52.	அப்பியாசப் புத்தகங்களை தயாரிக்கும் வர்த்தக நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
53.	விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
54.	குளிர்பானங்கள் முகவர் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
55.	லொத்தரிகளை விநியோகிக்கும் நிலையம் கடை ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
56.	அறிவித்தல் பலகைகளை வரைதல், பிளாஸ்ரிக் இலக்கங்களை தகடுகளில் அமைக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
57.	மோட்டார் வண்டிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை பாதுகாக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
58.	உருக்கினாலான வீட்டுத் தளபாடங்கள் உற்பத்தி அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
59.	பூச்செடி வகைகள், மருந்துச் செடிகள் மற்றும் ஏனைய செடி வகைகளை பாத்தியிடல்,விற்பனை அல்லது காட்சிப்படுத்தும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
60.	பலகையினாலான பொருட்கள் அல்லது ஏனைய எந்த நடமாடும் பொருட்களையும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல் (நாளொன்றுக்கு)	500.00	750.00	1000.00
61.	நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி இணைப்புகளை வழங்கும் தற்காலிக விற்பனைக்கான கடை ஒன்றினை நடாத்துதல் (ஒரு நாள் முதல் 7நாட்கள் வரை) -	-	-	1000.00
62.	வங்கிகளில் அடகு வைக்கப்பட்டு மீள்பெறாத பொருட்களை ஏல விற்பனை செய்யும் போது ஒரு நாளைக்காக அறவிடல்	500.00	750.00	1000.00
63.	நடமாடும் வர்த்தக கரத்தை அல்லது வாகனம் ஒன்றினை கொண்டு நடாத்துதல் (வருடாந்தம்) (கருவாடு, உலர்ந்த அல்லது உற்பத்தி பொருட்கள், பழ வகைகள், காய்கறிகள்)	-	750.00	-
64.	அலுமினியப் பொருட்களை விற்பனை செய்தலும் களஞ்சிப்படுத்தலும்	500.00	750.00	1000.00
65.	மின் இயந்திரங்கள் மூலம் நூல் உற்பத்தி, பஞ்சுகள் தயாரிப்பு மற்றும் புடவைகளை நெய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்			
66.	வளி பதனாக்கி இயந்திரம், குளிரூட்டிகள், கணினி இயந்திரங்கள், கையடக்கத் தொலைபேசிகள் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00
67.	மோட்டார் கொய்ல் (கம்பிச் சுருள்) சுற்றும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்	500.00	750.00	1000.00

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*வர்த்தகத்தின் தன்மை*	*நிரல் I*	*நிரல் II*	
		தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்*
		ரூபா ச.	*ரூபா ச.*	*ரூபா ச.*
68.	*படகுகளின் என்ஜின் பழுது பார்க்கும் மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
69.	*மின் சக்தியினால் அல்லது கை இயந்திரங்கள் மூலம் செயற்படும் அச்சகம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
70.	*வானொலி, தொலைக்காட்சி, கெமரா வீடியோ, கடிகாரம் பழுது பார்க்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
71.	*கையினால் பாதணிகளை உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
72.	*கற்சிலைகள், நினைவுப் பலகைகளை தயாரிக்கும் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
73.	*மின் விநியோகிக்கும் இயந்திரம் (ஜெனரேட்டர்) வாடகைக்கு வழங்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
74.	*தும்புத் தொழிற்சாலை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
75.	*தேங்காய் மட்டைகள் மற்றும் பலகைகளை உக்க வைக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
76.	*சுண்ணாம்பு சுடுவதற்கான சுண்ணாம்புச் சூளை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
77.	*தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
78.	*தோல் பொருட்களினால் அல்லது இறப்பர் பொருட்களினால் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றிபனை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
79.	*இறப்பர் புஷ் தயாரிக்கும் வேலைத்தளம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
80.	*இறப்பர் புகையூட்டும் வீடொன்றை ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
81.	*நெருப்புப் பொருட்கள், வெடி பொருட்கள் உற்பத்தி, விற்பனை மற்றும் களஞ்சியப்படுத்தும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
82.	*வாகனங்களுக்கு வாயு நிரப்புதல் மற்றும் வாயு விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
83.	*கேஸ் களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
84.	*புடவைகளுக்கு அலங்காரமிடல், (பத்திக் வேலையிடல்) நிலையம் ஒன்றினை நடாத்துதல்* *500.00*	*750.00*	*1000.00*	
85.	*தங்க ஆபரணங்களை உற்பத்தி செய்தல் அல்லது பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
86.	*தங்கப் ஆபரணங்களுக்கு நிறம் அடித்தல் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
87.	*மெத்தைகள் உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
88.	*சவர்க்காரங்கள் தயாரிக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
89.	*உலோகப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
90.	*பித்தளைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
91.	*டயர் டியூப் வோல்க்னைஸிங் செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*

அட்டவணை *(தொடர்ச்சி)*

தொ. இல.	*வர்த்தகத்தின் தன்மை*	*நிரல் I*	*நிரல் II*	
		தொழில் நடாத்தப்படும் ஆதனத்தின் பெறுமதி (வருடாந்த மதிப்பீடு)		
		750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	*751 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபா வரை*	*1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்*
		ரூபா ச.	*ரூபா ச.*	*ரூபா ச.*
92.	*புதிய அல்லது பழைய டயர் டியூப்களை களஞ்சியப்படுத்தல் வடிவங்களை வெட்டி விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
93.	*கொப்பரா உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
94.	*வாகனங்களை நிறுத்தும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
95.	*தேங்காய் எண்ணெய்களைத் தவிர்ந்த ஏனைய எண்ணெய் வகைகளை உற்பத்தி செய்தல்*	*500.00*	*750.00*	*1000.00*
96.	*முட்டைகளை சில்லறையாகவும், தொகையாகவும் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
97.	*சில்லறைக் கடை ஒன்றினை (குரொஸரி) நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*
98.	*மிளகாய், தானிய வகைகள், மா அரைக்கும் நிலையம் ஒன்றினை நடாத்துதல்*	*500.00*	*750.00*	*1000.00*

12-491/2

நாகொடை பிரதேச சபை

வர்த்தகக் கட்டணம் அறவிடல் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் கீழ் நாகொடை பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2022, நலம்பர் மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற நாகொடை பிரதேச சபை, மகா சபைக் கூட்டத்தில் இல 07.iii இன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை முடிவு செய்யப்பட்டது என இத்தால் அறியத்தருகின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
நாகொடை,
காலி,
2022, நவம்பர் 21.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 152 ஆவது பிரிவில் மற்றும் (1) ஆவது உப பிரிவில் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அச்சட்டத்தின் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட உப யாப்பின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் அல்லது அச்சட்டத்தின் 150 ஆவது பிரிவின் கீழ் யாதாயினும்

வரியொன்றைச் செலுத்துவதற்கு அவசியமற்ற யாதேனும் வியாபாரமொன்றை நாகொடை பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள 2023 ஆம் வருடத்தில் நடாத்திச் செல்லும் ஒவ்வொருவரிடமும் அவ்வியாபாரத்திற்கு அதற்கு முன்னைய ஆண்டில் பெற்றுக் கொண்ட வருமானம் இங்கு கீழுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட ஏதாவது விடய இலக்கமொன்றின் எல்லைகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட விபாயார வரியொன்றை 2023 ஆம் ஆண்டிற்காக விதித்து அறவிடவும், அவ்வியாபார வரி 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் நாகொடை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமெனவும் கௌவர சபைக்கு பிரேரிக்கின்றேன்.

அட்டவணை

	நிரல் I வருடத்திற்கான வியாபாரத்தின் அல்லது தொழிலின் வருமானம்	நிரல் II அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்ட வரித் தொகை (ரூ.)
01.	ரூபா 6,000.00 மேற்படாத சந்தர்ப்பத்தில்	இல்லை
02.	ரூபா 6,000.00 இற்கு மேற்படினும் ரூபா 12,000.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	90.00
03.	ரூபா 12,000.00 இற்கு மேற்படினும் ரூபா 18,750.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	180.00
04.	ரூபா 18,750.00 இற்கு மேற்படினும் ரூபா 75,000.00 இறகு மேறபடாத சநதரப்பததில்	360.00
05.	ரூபா 75,000.00 இற்கு மேற்படினும் ரூபா 150,000.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்	1,200.00
06.	ரூபா 150,000.00 இற்கு மேற்படும் போது	3,000.00

12-491/3

நாகொடை பிரதேச சபை

ஏக்கர் வரி விதித்தல் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 094 ஆம் பிரிவின் (3) ஆவது உப பிரிவின் கீழ் நாகொடை பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2023 நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற மகா சபைக் கூட்டத்தில் இல 07.iv கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை முடிவு செய்யப்பட்டது என இத்தால் அறியத் தருகின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
நாகொடை,
2022, நவெம்பர் 21.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 094 ஆவது பிரிவின் (3) வது உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாகொடை பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் அமைந்துள்ளதுமான மேலே குறிப்பிட்ட சட்டத்தில் 095 ஆவது பிரிவின் கட்டளையின் கீழ் ஏக்கர் வரியிலிருந்து விடுதலை செய்யப்படாதிருப்பினும் நிரந்தர அல்லது தொடர் விவசாய நிலம் ஒன்றின் கீழ்,

(அ) ஐந்து ஹெக்டயாரில் அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு காணிக்கும் அவ்விடத்தின் ஒவ்வொரு ஹெக்டயார் மீதும் 2023 ஆம் ஆண்டிற்கு 10.00 ரூபா வீதம் வருடாந்த வரி விதிக்கப்பட்டு அறிவிடப்படுவதற்கும்

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 094 வது பிரிவின் (3) வது உப பிரிவின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் நாகொடை பிரதேச சபை அதிகாரப் பிரிவு விசேட பிரதேசமொன்றாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவில் 1989.02.03 ஆந் திகதியுடைய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருப்பதால், ஒரு ஹெக்டெயாரிற்கு மேற்பட்ட எனினும், ஐந்து ஹெக்டயார்களுக்கு குறைந்த ஒவ்வொரு காணி மீதும் 2023 ஆம் வருடத்திற்காக 50.00 ரூபா வீதம் வருடாந்த ஏக்கர் வரியொன்று விதிக்கப்பட்டு அறவிடுவதற்கும், மற்றும்

(இ) பிரதேச சபைச் சட்டத்தின் 094 வது பிரிவின் (6) வது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவ்வருடத்தின் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளுக்கு முன்னர் சமமான நான்கு தவணைகளில் நாகொடை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் எனப் பிரேரிக்கின்றேன்.

12-491/4

நாகொடை பிரதேச சபை

விளம்பர அறிவித்தலுக்காக வரி விதித்தல் - 2023

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) சட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாகொடை பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2023 ஆம் வருடத்திற்குரிய விளம்பர அறிவித்தல் வரி விதித்தல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் நடைபெறல் வேணடுமென 2022 நவெம்பர் மாதம் 09 ஆம் திகதி மகா சபைக் கூட்டத்தில் இல. 07.(v) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை முடிவு செய்யப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
2022, நவெம்பர் 21.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் இலக்கம் 122 (1) ஆம் பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 1988.08.23 ஆந் திகதியும் 520/7 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (ஆ) பிரிவின் உள்ளூராட்சி அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பர /பார்வைச் சூழல் தொடர்பான உப யாப்பின் ஏற்பாடுகளின் பிரகாரம் நாகொடை பிரதேச சபை எல்லைக்குள் யாதாயினும் வீதியொன்றுக்கு பாதையொன்றுக்கு, ஆறொன்றிற்கு, வாவியொன்றுக்கு அல்லது வானிற்குத் தென்படுமாறு அறிவித்தல் ஒன்றைக் காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்வதற்காக கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2023 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரக் கட்டணமொன்றை 2023.01.01 தொடக்கம் விதிக்கப்படும் என நாகொடை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டுமெனத் தீர்மானிக்கின்றேன்.

அட்டவணை

விளம்பர அறவித்தல்

01.	சுவரொன்றில் அல்லது பலகை ஒன்றில் காட்சிப்படுத்தும் எந்தவொரு விளம்பர அறிவித்தலுக்காகவும் ஒவ்வொரு சதுர அடிக்கும் (வருடமொன்றிற்கு)	200.00
02.	பெனர் ஒன்றின் மூலம் காட்சிப்படுத்தும் எந்தவொரு விளம்பர அறிவித்தலுக்கும் ஒவ்வொரு சதுர அடிக்கும் (மாதமொன்றிற்கு)	100.00

12-491/5

நாகொடை பிரதேச சபை

பகிரங்க நாடகக் காட்சிக்கான கட்டளைச் சட்டத்துக்கமைய வரி விதித்தல் - 2023

பகிரங்க நாடகக் காட்சிக்கான கட்டளைச் சட்டத்தின் கீழ் 2023 ஆம் வருடத்தில் நாகொடை பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் நடாத்தப்படுகின்ற அனைத்து திரைப்படக் காட்சி, உதவித் திரைப்படக்காட்சி, மெஜிக் கண்காட்சி, சர்கஸ் கண்காட்சி மற்றும் எல்லா சங்கீதக் காட்சி ஒன்றுக்காக அச்சிடப்பட்ட பிரவேசப் பத்திரத்தின் பெறுமதியின் 10% வினோத வரியாகச் செலுத்த வேண்டுமெனவும், கீழே குறிப்பிட்டவாறு அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் 2022, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற மகா சபைக் கூட்டத்தில் பிரேரணை 07 முடிவு செய்யப்பட்டது என இத்தால் அறிவிக்கின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
2022, நவெம்பர் 21.

தீர்மானம்

பகிரங்க நாடகக் காட்சிக்கான கட்டனைச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் நாகொடை பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்குள் 2023 ஆம் வருடத்திற்கு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விதிக்கப்படும் எனத் தீர்மானித்துள்ளேன்.

அட்டவணை

1. தற்காலிக திரைப்படக் காட்சி, சர்கஸ் கண்காட்சி, மெஜிக் கண்காட்சி நாடகக் காட்சி மற்றும் வேறு கண்காட்சி ஒன்றுக்காக

	ரூ. ச.
நாளொன்றிற்கு அனுமதிப் பத்திரக் கட்டணம்	1000.00
மேற்படும் ஒவ்வொரு நாளுக்கும்	500.00

2. சங்கீதக் கண்காட்சிக்கு நாளொன்றுக்கு 1000.00

3. அனுமதிப் பத்திரங்களின் பெறுமதியில் நூற்றுக்கு பத்து (10%) வினோத வரி

12-491/6

நாகொடை பிரதேச சபை

முற்கட்டணங்கள், சேவைக் கட்டணங்கள், தழுவு அங்கீகாரத்தை வழங்குவதற்கான கட்டணமும் நாகொடை பிரதேச சபைக்குரிய சொத்துக்கள் மற்றும் நாகொடை பிரதேச சபை மூலம் விநியோகிக்கப்படுகின்ற சேவைக்கான கட்டணங்களை அறவிடல் - 2023

வீடுகள் மற்றும் நகர அபிவிருத்தி ஆணைச்சட்டம்

நாகொடை பிரதேச சபைக்கு அளிக்கபட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாகொடை பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திக் கருமங்கள் மற்றும் காணிகளை பிரிப்பதற்காகவும் (எல்லைப்படுத்துவதற்காகவும்)

அறவிடப்படுகின்ற முற்கட்டணங்கள், சேவைக் கட்டணங்கள், தழுவு அங்கீகாரத்தை வழங்குவதற்கான கட்டணமும் நாகொடை பிரதேச சபைக்குரிய சொத்துக்கள் மற்றும் நாகொடை பிரதேச சபை மூலம் விநியோகிக்கப்படுகின்ற சேவைகளுக்கான கட்டணங்களை அறவிடுவதற்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், 2022, நவெம்பர் 09 ஆந் திகதி நடைபெற்ற மகா சபைக் கூட்டத்தில் பிரேரணை இல 07.(vii) தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறியத் தருகின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
2022, நவெம்பர் 21.

தீர்மானம்

நாகொடை பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திக் கருமங்கள் மற்றும் காணிகளை பிரிப்பதற்காகவும் (எல்லைப்படுத்துவதற்காகவும்) அறவிடப்படுகின்ற முற்கட்டணங்கள், சேவைக் கட்டணங்கள், தழுவு அங்கீகாரத்தை வழங்குவதற்கான கட்டணமும் நாகொடை பிரதேச சபைக்குரிய சொத்துக்கள் மற்றும் நாகொடை பிரதேச சபை மூலம் விநியோகிக்கப்படுகின்ற சேவைகளுகான கட்டணங்களை அறவிடுவதற்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2022 ஆம் ஆண்டுக்கான கட்டணங்களை அறவிட வேண்டுமெனவும் கௌரவ சபை தீர்மானிக்கின்றது.

அட்டவணை 01

		ரூ. சதம்
1.	பேர்ச் 06 தொடக்கம் 20 வரை ஒரு துண்டிற்கு	250.00
2.	பேர்ச் 21 தொடக்கம் 40 வரை ஒரு துண்டிற்கு	300.00
3.	பேர்ச் 41 தொடக்கம் 60 வரை ஒரு துண்டிற்கு	400.00
4.	பேர்ச் 61 தொடக்கம் 120 வரை ஒரு துண்டிற்கு	450.00
5.	பேர்ச் 121 தொடக்கம் 160 வரை ஒரு துண்டிற்கு	500.00
6.	பேர்ச் 161 தொடக்கம் மேற்படும் ஒவ்வொரு பர்ச்சஸிற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு ரூ. 20.00 வீதம் அறவிடப்படல் வேணடும்.	

கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக கட்டணம் அறவிடல் - 2023
அட்டவணை 02

கட்டிடங்களின் பரப்பிற்கு ஏற்றவாறான கொடுப்பனவு	வதிவிடத்துக்காக (ரூபா)	வர்த்தக அல்லது வேறு நடவடிக்கைகளுக்காக (ரூபா)
சதுர மீற்றர் 45 இற்குக் குறைவு	150.00	300.00
சதுர மீற்றர் 45-90	250.00	500.00
சதுர மீற்றர் 91-180	500.00	1000.00
சதுர மீற்றர் 181-270	1000.00	2000.00
சதுர மீற்றர் 270 இற்கு மேற்படும் ஒவ்வொரு 10 சதுர மீற்றருக்கும் மேலதிகமாக சேர வேண்டிய தொகை எல்லை மதிலொன்றுக்காக (சதுர மீற்றருக்காக)	100.00 50.00	300.00 100.00

முறையான அனுமதிப் பத்திரமொன்று இன்றி மேற்கொள்ளப்படும் நிர்மாணங்களுக்காகவும் பாவனையை மாற்றுவதற்காகவும் காப்பு அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக செலுத்த வேண்டிய கட்டணங்கள் - 2023

அட்டவணை 03

நிர்மாணிப்புப் படிமுறை	வீடொன்றின் சதுர மீற்றர் ஒன்றிற்காக செலுத்த வேண்டிய கட்டணம் ரூ. சதம்	வர்த்தக அல்லது ஏனையவற்றின் சதுர மீற்றர் ஒன்றுக்கான கட்டணம் ரூ. சதம்
1. அடித்தள மட்டம்	20.00	50.00
2. கூரை மட்டம் வரை நிர்மாணித்திருக்கையில்	40.00	100.00
3. கூரையுடன் நிர்மாணித்திருக்கையில்	60.00	150.00
4. பூரணமாக நிர்மாணித்திருக்கையில்	100.00	200.00

எல்லை மதிலொன்றுக்காக ஒரு மீற்றர் நீளத்திற்காக ரூ. 800.00 வீதம் (நீள அடிக்காக ரூ. 250.00 வீதம்

கட்டிடங்களின் பாவனையை மாற்றுவதற்கான முற்கட்டணங்கள்

அட்டவணை 04

நிலப் பரப்பு	கட்டணம் (ரூபா)
500 வரை	100.00
500-1000	200.00
1001-2000	300.00
2001-3000	400.00
3001-5000	600.00
5001-7500	800.00
7501-10000	1000.00
10000 இற்கு மேல்	1000.00 உம் அதற்கு மேற்படுகின்ற ஒவ்வொரு 100 சதுர அடிக்கும் அல்லது அதன் பகுதி ஒன்றுக்கு 50.00 ரூபாய் வீதம்

நாகொடை பிரதேச சபைக்கு உரித்தான உடுகம பல்நோக்கு கட்டிடம், விளையாட்டுத்திடல், தண்ணீர் பவுஸர், நீர்த்தாங்கி, டிப்பர் வாகனம், டிரெக்ட்டர் வாடகைக்கு வழங்குவதற்காக கட்டணம் விதித்தல் - 2023

ஒரு நாளைக்காக உடுகம பலநோக்கு கட்டிடம் (320 கதிரைகளுடன்) வழங்கும் கட்டணம்

அட்டவணை 05

	ரூபா சதம்
பொது நடவடிக்கைகளுக்காக (அரச நிறுவனங்கள், பாடசாலைகளுக்காக)	10,000.00
தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக	15,000.00
வைப்புக் கட்டணம்	5,000.00
நீர் மற்றும் மின்சாரத்திற்காக	1,000.00

விளையாட்டுத்திடலை வாடகைக்கு வழங்குவதற்கான கட்டணங்கள்

அட்டவணை 06

விளையாட்டுத்திடல்	*பொது/அரச நடவடிகைகள் ரூ. ச.*	*தனிப்பட்ட நடவடிக்கைகள் ரூ. ச.*
1. மாப்பலகம விளையாட்டுத்திடல்	1500.00	2500.00
2. உடுகம விளையாட்டுத்திடல்	1500.00	2500.00
3. கோணதெனிய விளையாட்டுத்திடல்	1500.00	2500.00
4. உடுகம தெற்கு விளையாட்டுத்திடல்	1500.00	2500.00

தண்ணீர் பவுஸர் மற்றும் நீர்த்தாங்கி வாடகைக்கு வழங்கும் கட்டணங்கள்

அட்டவணை 07

	லீற்றர் 4000 (ரூ.)	*லீற்றர் 6000 (ரூ.)*	*லீற்றர் 8000 (ரூ)*
சபையின் அதிகாரப் பிரிவிற்குள் ஒரு நாளைக்காக அறவிடப்படும் கட்டணம்	10000.00	12000.00	15000.00
சபையின் அதிகாரப் பிரிவிற்கு வெளியே ஒரு நாளைக்காக அறவிடப்படும் கட்டணம்	11000.00	13000.00	16000.00

டிப்பர் வாகனம் வாடகைக்கு வழங்குவதற்கான கட்டணங்கள்

8 மணித்தியாலங்களுக்காக 50km வரை	ரூ. 20000.00
8 மணித்தியாலங்களுக்கு மேற்படும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்குமாக	ரூ. 2600.00
50km இற்கு மேற்படும் ஒவ்வொரு கிலோமீற்றருக்குமாக	ரூ. 100.00

டிரெக்டரை வாடகைக்கு வழங்கும் கட்டணங்கள்

டிரெக்டர் மணித்தியாலத்திற்கு 5km வரை (ட்ரேலருடன்)	- ரூ. 1000.00
மேற்படும் ஒவ்வொரு கிலோமீற்றருக்காகவும்	- ரூ. 400.00

தண்ணீர் இன்றி 2000 லீற்றர் தாங்கியை வாடகைக்கு வழங்கும் கட்டணம்

ஒரு நாளைக்கு	ரூ 2000.00

2023 இல் சபைக்கு சொந்தமான தண்ணீர் பவுசர்தள், டிப்பர்கள், டிராக்டர்தள், தண்ணீர் தாங்கிகள் மற்றும் பிற வாகனங்களின் வாடகை தொடர்பான கட்டணங்களை எரிபொருள் விலையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் திருத்துவதற்கு உள்ளூராட்சி சபைக்கு முழு அதிகாரம் உள்ளது என்ற பிரேரணை 2022 நவெம்பர் மாதம் 09 திகதி நடைபெற்ற மகா சபைக் கூட்டத்தில் பிரேரணை இல. 07(vii) தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறியத் தருகின்றேன்.

மாதிரிப் படிவங்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள்

அட்டவணை 08

1. வீதி ரேகையும் ஒப்படைக்கப்படாத சான்றிதழொன்றும் விநியோகிப்பதற்கான கட்டணம்	ரூ. 750.00
2. அபாயகரமான பலா மரத்திற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் கட்டணம்	ரூ. 2000.00

3. அபாயகரமான வேறு மரமொன்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் கட்டணம்	ரூ. 1000.00
4. சொத்துரிமையை உறுதிப்படுத்தும் சான்றிதழொன்றை வழங்கும் கட்டணம்	ரூ. 200.00
5. கட்டிடங்களுக்கான விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூ. 1000.00
6. மீண்டும் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கான விண்ணப்படிவக் கட்டணம்	ரூ. 500.00
7. வேறு சான்றிதழொன்றை விநியோகிப்பதற்கான கட்டணம்	ரூ.200.00
8. அளவைகள் திட்டமிடலை அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூ. 750.00
9. சுற்றாடல் அனுமதிப்பத்திர விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூ. 100.00
10. நீர்க் குழாய்களைப் பொருத்துவதற்கு பாதைகளை உடைப்பதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூ. 200.00
11. நீர்க் குழாய்களைப் பொருத்துவதற்கு பாதைகளை உடைப்பதற்கான முற்கட்டணம்	ரூ. 500.00
12. கட்டிடங்களுக்கான இணக்கச் சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பக் கட்டணம்	ரூ. 500.00
13. கட்டிடங்களுக்கான இணக்கச் சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பக் கட்டணம	ரூ. 500.00
a. வீட்டு உபயோகத்திற்கு	ரூ. 1000.00
b. வணிக பயன்பாட்டிற்கு	ரூ. 1500.00
14. அனுமதிக்கப்பட்ட கட்டிடங்கள் திட்டமிடலுக்கான காலத்தை நீடிப்பதற்கான கட்டணம்	
a. முதலாவது வருடத்திற்காக ரூ. 150.00	
b. இரண்டாவது வருடத்திற்காக ரூ. 200.00	
c. மூன்றாவது வருடத்திற்காக ரூ. 250.00	
(ஆகக் கூடிய கால எல்லை 03 வருடங்களாகும்)	
15. காணியொன்றை ஏல விற்பனை செய்வதற்காக அறவிடப்படும் கட்டணம்	
a. அபிவிருத்தி அனுமதிப் பத்திரமொன்றை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூ. 100.00
b. அபிவிருத்தி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான கட்டணம்	ரூ. 1000.00
c. துண்டு வரைபடங்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூ. 500.00
d. துண்டு வரைபடங்களை அனுமதிக்கையில் முற்கட்டணம் (காணியின் ஒப்பிணை பெறுமதிக்கு ஏற்ப)	
(அ) ரூ. 25,000.00 அல்லது அதற்குக் குறையும் போது	ரூ. 1000.00
(ஆ) ரூ. 25,001 முதல் 500,000 வரை	ரூ. 3000.00
(இ) ரூ. 500,001.00 முதல் 1,000,000.00	ரூ. 5000.00
(ஈ) ரூ. 1,000,000.00 இற்கு மேல்	ரூ. 8000.00
e. துண்டு வரைபடங்களை அனுமதிக்கும் கட்டணம் (ஒரு துண்டுக்கு)	ரூ. 200.00
f. துண்டு வரைபடங்கள் மற்றும் தகுதிச் சான்றிதழ் விநியோகிப்பதற்கான கட்டணம்	ரூ. 1000.00
16. நூலக அங்கத்துவ விண்ணப்பப்படிவக் கட்டணம்	ரூ. 100.00
17. நூலக புத்தகங்கள் தாமதித்தல் கட்டணம் (இரண்டு புத்தகங்களுக்கும்)	ரூ. 2.00
18. நூலக அங்கத்துவத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம்	ரூ. 25.00
தொலைபேசி கம்பம் மற்றும் ஒலிபரப்பு நிலையத்திற்காக கட்டணம் அறவிடல்	
1. தொலைபேசி கம்பம் மற்றும் ஒலிபரப்பு நிலையங்களின் வரைபடத்தை அனுமதிக்கையில் நிலத்தின் சதுர அடியொன்றுக்காக அறவிடப்படும் கட்டணம்	ரூ. 100.00

2. கம்பத்தின் முதலாவது 10 மீற்றர் விடுவிக்கப்படுவதுடன், அதற்கு மேற்படும் ஒவ்வொரு மீற்றருக்கும் ரூ. 2500.00

3. பரிசீலனைக் கட்டணம் ரூ. 1000.00
4. வருடாந்த வியாபார வரி ரூ. 3000.00

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
2022, நவெம்பர் 21.

12-491/7

நாகொடை பிரதேச சபை

காணிகள் விற்பனை மீதான வரிகளை விதித்தல் - 2023

நாகொடை பிரதேச சபையின் மூலம் 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற சபைச் கூட்டத்தில் பிரேரணை இல. 07. viii ல் சபையினால் அனுமதிக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
2022, நவெம்பர் 21.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் கழ் நாகொடை பிரதேச சபையின் அதிகாரப் பிரிவிற்குள் யாதேனும் காணியொன்றை ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரின் சேவையாளர் அல்லது பிரதிநிதியொருவர் மூலம் பகிரங்க ஏல விற்பனையில் அல்லது அன்யோன்ய முறையில் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அக்காணிகள் விற்பனை செய்து பெற்றுக் கொள்ளும் தொகையில் நூற்றுக்கு ஒன்று (1%) சமமான வரியை விற்பனையாளர் அல்லது ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரின் சேவையாளர் அல்லது பிரதிநிதி மூலம் செலுத்த வேண்டுமென நாகொடை பிரதேச சபை பிரேரணை செய்துள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

12 - 491/8

நாகொடை பிரதேச சபை

மோட்டார் வாகனங்கள் மற்றும் விலங்குகளுக்கான வரிகளை விதித்தல் - 2023

நாகொடை பிரதேச சபையின் மூலம் 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி நடைபெற்ற மகா சபைச் கூட்டத்தில் பிரேரணை இல 07. ix இல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை சபையினால் அனுமதிக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

நிமல் விக்டர் நாகொடவிதான,
தலைவர்,
நாகொடை பிரதேச சபை.

நாகொடை பிரதேச சபை,
2022, நவெம்பர் 21.

தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபைகள் சட்டத்தின் இலக்கம் 148 வது பிரிவின் கீழ் கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானங்களுக்கேற்ப வாகனங்கள் மற்றும் விலங்குகள் பற்றிய வரியொன்றை 2023 ஆம் வருடத்திற்காக விதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது என அச்சட்டத்தின் 147 வது பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிப்பதுடன், 148 (3) வது பிரிவின் கீழ் வாடகைத் தொகை 2023, யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டுமென நாகொடை பிரதேச சபை பிரேரணை செய்தது என இத்தால் அறிவிக்கின்றேன்.

அட்டவணை

01.	சைக்கிள் அல்லது ட்ரைசிக்கிள் அல்லாத வாகனமொன்றுக்காக	25.00
02.	துவிச்சக்கர வண்டியை வியாபார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதாயின்	18.00
03.	துவிச்சக்கர வண்டியை வியாபார நடவடிக்கைகள் அல்லாத நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதாயின்	4.00

12-491/9

கொழும்பு மாநகர சபை

1979 ஆம் ஆண்டின் இலக்கம் 42 மற்றும் 1985 ஆண்டின் இலக்கம் 20 கொண்ட மாநகர சபை திருத்தச் சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்ட மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அத்தியாயம்) 247அ, 247ஆ, 247இ, மற்றும் 247 உ ஆகிய பிரிவுகளின் பிரகாரம் கொழும்பு மாநகர சபையினால் 2022 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வரி அறவிடுதல்.

2022.12.06ம் திகதி நடாத்தப்பட்ட மாநகர சபையின் இல 3392 ஐ கொண்ட சபை தீர்மானத்தின் பிரகாரம் 2023ம் ஆண்டுக்கு மற்றும் அதன் பின்னரும் செய்யப்படுகின்ற திருத்தங்களை உரிய முறையில் பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தப்படும் வரை கொழும்பு மாநகர சபையினால் விதித்து அறவிடுவதற்காக இருக்கின்ற வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் தொழிற்சாலை தொடர்பான விடயங்களின் மற்றும் அல்லது வர்த்தக வியாபார விடயங்களின் வரி அறவிடுதல் தொடர்பான கட்டண முறையொன்று கீழே தரப்பட்டுள்ள உப ஆவணத்தில் (1), (2), (3), (4) என முறையே எல்லோரும் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இக்கட்டணம் 2023.12.31 வரை அமுலில் இருக்கும்.

2023ம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய இந்த அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வரி 2023ம் ஆண்டு மார்சு மாதம் 31 ம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.

ரோசி சேனாநாயக்க,
மாநகர முதல்வர்,
கொழும்பு மாநகர சபை.

நகர மண்டபம்,
கொழும்பு மாநகர சபை,
கொழும்பு - 07.
2022, திசெம்பர் 15.

அட்டவணை இல. 1

247 அ பிரிவின் கீழ் உள்ள அனுமதிப்பத்திர அறவீடு

(அ) அனுமதிப் பத்திர அறவீட்டு வாய்ப்பாடு

வருடாந்த பெறுமதி (ரூ)	அனுமதிப்பத்திர அறீவீடு (ரூ)
ரூ. 1500.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பங்களின் போது	2,000.00
ரூ.1500.00 ஐ அதிகரிக்கின்ற போதிலும் ரூபா 2500.00 ஐ அதிகரிக்காத சந்தர்ப்பங்களின் போது	3,000.00
ரூ. 2500.00 ஐ அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது	5,000.00

(ஆ) இருப்பிடத்தில் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளக்கூடிய செயலாற்றும் நடவடிக்கை தொடர்பான பட்டியல்

1. காரீயம் தயாரித்தல் மற்றும் தரம் பிரித்தல்
2. காரீயம் களஞ்சியப்படுத்தல்
3. பசளை உற்பத்தி செய்தல்
4. பசளை களஞ்சியப்படுத்தல்
5. மிருக தோல்களை உற்பத்தி செய்தலும் களஞ்சியப்படுததலும்
6. மாசி 250 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
7. கோழிகள் வைத்திருத்தல்
8. கருங்கற்கள் அல்லது கபொக் கற்களை தோண்டுதல்
9. பொரளு கற்கள் தோண்டுதல்
10. மாடு அல்லது குதிரை மடுவம் வைத்திருத்தல்
11. மிருக வைத்தியசாலை நடாத்துதல்
12. இறப்பர் தயாரிப்பு
13. மைகா சுத்தப்படுத்தல்
14. செம்மறி ஆடு அல்லது ஆடுகள் 10 அல்லது அதற்கு அதிகமானவற்றை பண்ணை அல்லது மடுவம் நடாத்துதல்
15. ஓடு, கொங்கிறீற் /குழாய் /அல்லது இதர கொங்கிறீற் பொருட்களை உற்பத்தி செய்தல்
16. கறுவாப்பட்டை /தும்பு /கராம்பு /கந்தகம் ஆகியவற்றின் புகையைக் கொண்டு தயாரித்தல்
17. சீமெந்து 1250 கிலோ கிராமுக்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
18. ஒட்டுப்பால் அரைத்தல் அல்லது உலரவைத்தல்
19. ட்ரங்க்பெட்டிகள் அல்லது சூட்கேசுகள் உற்பத்தி செய்தல்
20. இன்ஜெக்டர் பம்களை சுத்தம்செய்யும் நிலையத்தை நடாத்தி வரல்
21. கிருமி நாசினி உற்பத்தி செய்தல்
22. டயர் மீள்நிரப்புதல் அல்லது கட்டா வெட்டும் இடத்தை நடாத்துதல்
23. கறுவா 50 கிலோ கிராமிற்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
24. கொக்கோ 500 கிலோ கிராமிற்கு அதிகமாக களஞ்சியப்படுத்தல்
